மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு நல்ல முடிவை எதிர்பார்க்கிறார்கள். நிச்சயமாக ஒரு நல்ல முடிவைத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விரைவிலே எடுப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கி கிறேன். அதேபோல, சென்னையைப் பொறுத்தவரை, 16 மீனவர்கள் மற்றும் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங் களின் கடன் நிவாரணம் ரூ. 19,32,365.30 காசு ஆகும். அது தேவையென மத்திய கூட்டுறவு வங்கியும், சென்னை மண்டல மீன்துறை உதவி இயக்குநர், ரூ. 25,68,747.11 காசு கடன் நிவாரணம் தேவையெனவும், ஆக மொத்தம் ரூ. 45,01,112.41 தேவை எனக் கோரியுள்ளார். பொதுவாக, மீனவர்கள் வாங்கிய கடன்கள் என்று குறிப்பிடும் போது, மீனவர்கள் வாங்கிய வலை, இயந்திர சாதனங்கள், விசைப் படகுகள் பெறுவதற்காகப் பெற்ற கடன்கள் இதில் அடங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

407—

சிவகிரியில் அரசு நூற்பாலை.

*3362 திருமதி கவி நிலவு தர்மராஜ்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா? :

நெசவாளர்களை அதிகம் கொண்ட மொடக்குறிச்சி தொகுதி சிவகிரியில் ஓர் அரசு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகிரியில் கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்கும் கருத்து ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப் பெற்றிருந்ததால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. கவன ஈர்ப்பு

(அ) கரூர் வட்டம், பள்ளப்பட்டி மருத்துவமனையில் முதுகலைப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் இல்லாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு.

1992 மார்ச் 31]

திருமதி கே. மரியம்உல் ஆசியா கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திருமதி கே. மரியம்உல் ஆசியா.

திருமதி கே. மரியம்உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''கரூர் வட்டம், பள்ளப்பட்டியில் உள்ள அரசு மருத்துவ மனையில் முதுகலைப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் இல்லாதது குறித்து'' மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை ஆவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

கரூர் வட்ட பள்ளப்பட்டியில் உள்ள அரசு பொது மருத்துவ மனைக்கு ஒப்பளிக்கப்பட்ட உதவி மருத்துவர் பணியிடங்கள் மூன்று. அதில் இரண்டு பெண் மருத்துவரும், ஒரு ஆண் மருத்துவரும் பணிபுரிந்து வருகின்றார்கள். ஆண் மருத்துவர் கண் சிகிச்சையியலில் பட்டயப் படிப்பு படித்தவர். இம்மூன்று மருத்துவர்கள் தவிர, குழந்தை சிகிச்சையியல் பட்டயப் படிப்பு படித்த ஒரு ஆண் மருத்துவர் ஒதுக்குப் பணியில் (Reserve Duty) பணிபுரிந்து வருகின்றார்.

எனவே, அம்மருத்துவ மனையில் சிறப்பியல் முதுகலைப் பட்டயப் படிப்பு படித்த இருவர் பணிபுரிந்து வருவதால், தற்போது அங்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் ஏதும் இல்லை.

திருமதி கே. மரியம்உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளப்பட்டியில் இருக்கின்ற ஹாஜி வாக்ஃப் அரசு மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்று விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. அரவக்குறிச்சி தொகுதி முழுவதற்கும் இந்த அரசு மருத்துவ மனைதான் இருக்கின்றது. மேலும் இந்த அரசு மருத்துவ மனைக்கு அருகில் உள்ள அரவக்குறிச்சி பகுதியிலும் மற்றும் அதைச் சுற்றியுள்ள 84 கிராமங்களில் இருந்தும் மக்கள் சிகிச்சைக்காக வருகின்றார்கள் 1988-ல் இரண்டு ஆப்பரேஷன் தியேட்டர்களும், அதனுடன் இணைந்த ஸ்டெர்லைசேஷன் ப்ரிபரேட்டரி ரூம் ஒன்றும் திறக்கப்பட்டது. அப்படித் திறக்கப்பட்டும் அவைகள் இன்றுவரையில் பயன்படுத்தாமல் இருக்கின்றன. காரணம், அங்கு அறுவை சிகிச்சைக்காகத் தனி மருத்துவர்கள் இல்லை மேலும், டி. ஜி. ஓ. படித்த மருத்துவர்கள் இல்லை. அதன்

காரணமாக அங்குள்ள மக்கள் அறுவை சிகிச்சைக்காக கரூர் அல்லது திண்டுக்கல்லுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இத்தகைய ஒரு பிரிவு திறக்கப்பட்டும் இன்றுவரை தகுந்த டாக்டர்கள் இல்லாத காரணத்தால் அவைகள் பயன்படுத்தப் படாமல் இருக்கின்றன......

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி கே. மரியம்உல் ஆசியா: எனவே, அதற்குத் தகுந்த மருத்துவர்களை அமர்த்த வேண்டும் என்றும், மேலும் அரசு மருத்துவமனையைச் சுற்றி மதில் சுவர் இல்லாததால் ஆடு மாடு, பன்றிகளின் தொல்லைகள் அங்கே அதிகமாக இருக்கின்றன. அதனைத் தடுப்பதற்கு அங்கு மதிற்சுவர் எழுப்ப வேண்டும் என்றும், மேலும் அங்கே 20 படுக்கைகள்தான் இருக்கின்றன. அந்த 20 படுக்கைகள் போதவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய உரையே போதும் என்று நினைக்கிறீர்களா அல்லது பதில் வேண்டும் என்று நினைக்கிறீர்களா? உங்கள் உரையே போதும் என்று நினைத்தால் உட்காருங்கள். பதில் வேண்டுமென்றால் கேள்வி கேளுங்கள்.

திருமதி கே. மரியம்உல் ஆசியா : ஆகவே, அங்கு 40 படுக்கையாக அதிகரிக்க வேண்டும் என்றும், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகச் செய்ய முன்வருவாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 4 மருத்துவர்கள் இருக்கிறார்கள். 32 படுக்கைகள் இருப்பதாக எனக்குத் தகவல் கொடுத்து இருக்கிறார்கள். 32 படுக்கைகளுக்கு 4 மருத்துவர்கள் போதும். அங்கே இருக்கின்ற பிரச்சினையே தியேட்டர் இருக்கிறது. அங்கே சர்ஜன் இல்லை என்ற நிலையைச் சொல்லியிருக்கிறார்கள், ஏற்கனவே, அங்கே கண் சிகிச்சை பிரிவிலே பட்டம் பெற்ற பட்டயப் படிப்பு பெற்றவர் ஒருவரும், குழந்தைகள் மருத்துவத்திலே பட்டயப் படிப்பு பெற்ற ஒருவரும் அங்கே பணியாற்றுகிறார்கள், இருந்தாலும் அந்தத் தியேட்டரைப் பயன்படுத்துகின்ற அளவுக்கு மருத்துவர்கள் அங்கே நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுப்புறச் சுவரைப் பொறுத்தவரையில், அங்கே அந்த மருத்துவ மனையினுடைய மேம்பாட்டிற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அதன் மூலமாகக் கட்டித் தருவதாக்

1992 மார்ச் 31] [திரு. சு. முத்துசாமி]

எங்களுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும்கூட அவர்களோடு பேசி விரைவாக அந்தச் சுற்றுப்புறச் சுவரைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கத்தினுடைய நிதிநிலையைக் கருதி சுற்றுப் புறச் சுவர்களுக்கு அரசாங்கம் செலவழிப்பது என்பது கடினம் என்பதை ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். படுக்கைகள் 32 ஆக இருக்கின்ற காரணத்தினால், வட்ட மருத்துவமனை மற்றும் நான்-தாலுகா ஹாஸ்பிடலிலே 32 படுக்கைகள் என்ற கொள்கை நியதியிலே வைத்திருக்கிறோம். எனவே அது போதும் என்று கருதுகிறேன்.

(ஆ) தூத்துக்குடியைச் சுற்றியுள்ள கடற்கரைகளில் விரல் ஜல்லியை (சுண்ணாம்புக்கல்) எடுப்பதற்குத் தடை இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். டேனியல்ராஜ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தூத்துக்குடியைச் சுற்றியுள்ள கடற்கரைகளில் இருக்கும் விரல் ஜல்லியை (சுண்ணாம்புக்கல்) எடுப்பதற்கு அரசு தடை செய்துள்ளது குறித்து'' மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

மன்னார் வளைகுடா பகுதியில் உள்ள 21 தீவுகளில் 17 தீவுகள் இராமநாதபுரம் மாவட்டத்திலும், 4 தீவுகள் சிதம்பரனார் மாவட்டத்திலும் அமைந்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 17 தீவுகளில் வெகு நீண்ட காலமாகவே பவழப்பாறை அகழ்ந்தெடுத்து செல்வது அனுமதிக்கப்படுவதில்லை. இத்தீவுகளில் சிறந்த தாவர வகைகள் உள்ளதாலும், பவழப்பாறைகள் நன்கு அமைந்துள்ளதாலும், கடல் அலைகளினால் இத்தீவுகளில் மண் அரிப்பு ஏற்படாமல் தடுக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. ஆனால் சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள தூத்துக்குடி கடலோர எல்லையில் அமைந்துள்ள 4 தீவுகளில் உள்ள பெரிய தொழில்